310

310

தாரண ஹு } ஸ்ரீ: { ஸம்புடம் - 4
மார்கழி - தைமீ } { ஸஞ்சிகை - 1
January ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம: 1945



ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா

"அஹோபிலே காருடசைலமத்யே க்ருபாவசாத் கல்பித ஸந்நிதானம் |
லக்ஷ்ம்யா ஸமாலிங்கித வாமபாகம் லக்ஷ்மீந்ருஸிம்ஹம் சரணம் ப்ரபத்யே ||"

		பக்கம்
விஷய ஸூசிகை :—1.	ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்	1
2.	கீதாம்ருதவர்ஷிணீயின் முகவுரை	3
3.	பஞ்சாங்க ஸங்க்ரஹம்	4
4.	ஸ்ரீ அத்திப்பட்டு அழகிய சிங்கர் ப்ரபாவம்	5
5.	ஸ்ரீ தேசிக வைபவம் ... 5 6. செய்திகள்	7
7.	ஸம்பாதகரின் குறிப்புக்கள்	9

ஸ்ரீ:

ஸ்ரீ ஸங்கல்ப ஸூர்யோதயம்

[4-ஆம் அங்கம்]

[ஸ்ரீ. உப. அன்பில் வி. கோபாலாசார்ய ஸ்வாமி, M.A.,B.L.,
அட்வோகேட், திருச்சி]

[ஸம்புடம் 3, ஸஞ்சிகை 12, பக்கம் 270-ன் தொடர்ச்சி]

'வ்யூஹமாய்ச் சென்று நாம் விக்ந கார்யங்களைச் செய்வோம்' என்று காமன் சொல்லித் தான் முன்பும், த்ருஷ்ணை நடுவிலும் மற்ற ஆண்பிள்ளைகள் அவள் இரு பக்[illegible]லாயும் செல்லுகிறார்கள். ஐந்தாறு அடிகள் சென்றதும், புருஷன் [illegible]வம் புரிவதை முன்சென்ற காமன் பார்க்கிறான். காமன் எல்லாத் [illegible]ம். 'ஜஹி சத்ரும் மஹாபாஹோ காமரூபம் துராஸ [illegible] அவனே [illegible] ப்ரதான சத்ருவென்று பாடிற்று; 'காம ஏஷ [illegible]று இருவ[illegible]ரயும் ஒன்றாகவும் பாடிற்று. 'காமாத் க்ரோதோ- [illegible] காமம் தடைபட்டால் அதிலிருந்து கோபம் கிளம்புகிற தென்றும் [illegible]ப்பட்ட காமம் கோபமாகப் பரிணமிக்கிற தென்றும் காமன் ஸர்வ [illegible]றும் சாங்கர பாஷ்யம். 'ஜ்ஞானினோ நித்யவைரிணா காம-

SL
Q22ண211, N4
N45.4.1.
310|33

ரூபேண' என்று கீதை. 'காமரூபேண' என்பதில் இரண்டு பொருள். 'காமன் என்று பெயர் கொண்டவன்; க்ரோதம் முதலிய மற்ற குணரூபங்களையும் மாறி மாறித் தரிக்கவல்லவன். மூன்ரும் அத்யாயத்தில் யோக விரோதிகளான ராகம் த்வேஷம் காமம் க்ரோதம் இவைகளின் ப்ரஸ்தாவம். அவற்றிலும் காமம் முக்ய சத்ரு. அதை நிமித்தீகரித்து மற்றவை உதிப்பன. 'பாப்மாநம் ப்ரஜஹி ஹ்யேநம் ஜ்ஞாநவிஜ்ஞாந நாஶநம்' என்று நாலாம் ஶ்லோகத்திலும், 'ஜஹி ஶத்ரும் மஹாபாஹோ காமரூபம் துராஸதம்' என்று அத்யாய முடிவான 43-ம் ஶ்லோகத்திலும், காமனைத் தொலைப்பதையே இந்த அத்யாயம் முடிய உபதேசமாகச் செய்யப்படுகிறதென்று சந்த்ரிகை. ஸாதநங்களில் காமஜயம் முக்யமானது. ஆழ்வாரும் ஶாரீரக சாஸ்த்ரத்தை ஸங்க்ரஹித்த முதல் இரண்டு திருவாய்மொழிகளில், 'வீடுமின் முற்றவும்' என்றும் 'அற்றது பற்றெனில் உற்றது வீடுயிர்' என்றும் இதை வற்புறுத்துகிருர். க்ரோதன் 'புரஸ்க்ருத மந்மதரான நம்மை யார் ஜயிக்கவல்லார்?' என்று காமத்தை முன்னிட்டு மற்றவர் வ்யாபரிப்பதைக் கூறுகிருன்.

ஜீவன் ஏகாந்தத்தில் ஏகாக்ரமாய் விவேகரும் ஸுமதியும் மட்டும் அருகே யிருந்து உள் துணை செய்ய ஜ்ஞாந யோக நிஷ்டை தொடங்குவதைக் காமன் பார்த்துத் தோழர்களுக்குக் காட்டுகிருன். க்ரோதன், இந்த யோகம் செய்யும் யோகியைப் பரிஹஸித்துப் பேசுகிருன். அவன் கண்ணிற்கு எல்லாம் காம ஶ்ருங்காரமாகத் தோன்றுகிறது.

"स्वसंबोधःसौधः शुभगुणगणो मंडनविधिः समाधिःसंभोगो रहसि जपशैली रतिकथा ।
सुषुप्ते लोकेऽद्य श्रुतिपरिषदन्तःपुरगतो मुनिः शान्तिव्याजान्मुखरयति शृंगारनिगमम् ॥"

காம ரதி போகத்திற்கு உயர்ந்த உப்பரிகை வேணும்; ஏகாந்தம் வேணும். இங்கே ஸ்வரூப ஜ்ஞாநாப்யாஸம் என்னும் ப்ரஜ்ஞையே ப்ராஸாதம் என்னும் அரண்மனை உப்பரிகை; 'ப்ரஜ்ஞாப்ராஸாதமாருஹ்ய' என்பர். வாஸனை த்ரவ்யங்கள் சந்தநம் முதலிய பூசல்கள் புஷ்பாலங்காரங்கள் முதலியவற்றைத் தரிப்பர் காமிகள். ஶமம் தமம் முதலிய ஸத்வகுண வாஸநா குணங்களையே இந்த யோகி அலங்காரமாகப் பூண்டவன். துளி ரக்த சந்தந மில்லை; வாஸனை த்ரவ்ய மில்லை; வாஸனைப் புஷ்ப மில்லை. ஸமாதியே கூடல் ஶ்ருங்காரம். இங்கே ஸ்வஸ்வரூப த்யாநம் யோகம். தன்னைப்பற்றியே ஏகாந்த த்யாநம் செய்து, தன்னை உடலிலிருந்து பிரித்துத் தனிப்படுத்திக் காட்சி காணும் ஜ்ஞாந யோகம்; உடல்கள் கூடும் காம ரதி யோக மல்ல. பகவத் விஷயமான யோகத்திலாவது இரண்டு ஆத்மாக்களின் கூடல் இருக்கலாம். 'பகவத் காமனை யென்று அறிகிலன் பாக்யஹாநியால்' என்று கூட இங்கே பேச இடமில்லை. தன்னையே தான் காமிப்பது. இரண்டு ஆத்மாக்கள் கூடினல் அல்லவோ ஸம்போக ரஸ முண்டு. கூடலின்ப ரஸத்தில் ஏதேதோ ப்ரியப் பேச்சுகளும் பிதற்றல்களும் ரதி கூஜிதங்களும் இருக்கும். ராமனும் ஸீதையிடத்தில் 'அவிரலித கபோலம் ஜல்பதோரக்ரமேண' [ஏகாந்தத்தில் கன்னத்தோடு கன்ன முறைந்து தாறு மாருய் க்ரமத்தை மீறி, உச்சாவசமாய் ஏதேதோ பிதற்றினேமே] என்று போக ரஹஸ்யங்களை வர்ணிக்கிருர். அங்கே பகவானும் ப்ரிய பத்நியுமாக ஸம்போக ரஸம். இங்கே அது இல்லையே; இவன் கேவலன் ஒருவனே தானே. இவன் தன்னையே பற்றி ஜபிக்கிருன். இது ரதிப் பேச்சாகுமோ? ரதி கதையாகுமோ? உலகெல்லாம் தூங்கியிருக்கும்பொழுது, காமிகள் விழித்திருந்து பல செடிகளுள்ள அந்தப்புரத்தில் கூடி இன்புறுவர். 'யா நிஶா ஸர்வபூதாநாம் தஸ்யாம் ஜாகர்தி ஸம்யமீ' என்று கீதையின் இரண்டாம் அத்யாயத்தின் முடிவில், ஜ்ஞாந யோகியின் ப்ரஶம்ஸை. ஸ்திர ப்ரஜ்ஞனுடைய லக்ஷணம் முதலியவை வர்ணிக்கு மிடம். 'உலக மெல்லாம் தூங்குவது ஆத்மா விஷயத்தில்; உலகமெல்லாம் விழித்திருப்பது அநாத்மாவான தேஹம் அதன் ஸம்பந்திகள் ஆகிய விஷயத்தில். 'ஜ்ஞாநயோகியோ உலகம் தூங்கும் விஷயமான ஆத்மாவில் விழிப்பும், உலகம் கண்கொட்டாமல் விழித்திருக்கும் தேஹாதி விஷயங்களில் தூக்கமுமா யிருக்கிருன்' என்று பகவதுபதேசம். இவன் அந்த ஶ்லோகத்தையே குறிப்பிட்டு அதற்கு விபரீதப் பொருள் கொண்டு பரிஹஸிக்கிருன். அந்த ஶ்ருதிப் பெண்கள் நிறைந்த அந்தப்புரத்தில் இவன் உலகம் தூங்குகையில் தானே ஏகாகியாய் ரமிக்கிருன். ஏகாகிக்கு ரமண முண்டோ? இவன் நம்பும் ஶ்ருதிகளையே கேட்போம். இப்படி ஏமாறுகிருனே இவன். இவன் தன் ஸ்வரூபத்தை நன்ருக விளக்கிக் காட்டும் ப்ரணவாதி வேத மந்த்ரங்களை ஜபித்துக்கொண்டு தன் ஸ்வரூப த்யாந நிஷ்டையி லிருக்கிருன். முணுமுணுவென்று வாயால் மந்த்ரோச்சாரணம். முநி யென்று பெயர். 'ஆருருக்ஷோர்முநேர்யோகம்' என்று கீதாசார்யனும் ஆரும் அத்யாயத்தில் இந்த ஜ்ஞாநயோக நிஷ்டனை 'முநி' யென்ருர். அந்த ஶ்லோகத்தை நினைத்து இங்கே முநி சப்தத்தால் பரிஹாஸம் செய்கிருன் க்ரோதன். மௌந வ்ரத முநியென்று பெயர்மட்டுமே. எல்லாம் ஓய்ந்து சும்மா இருப்பதாகப் பெயர். உண்மையில் வாய் ஜபித்துக்கொண்டே யிருக்கிறது. கண்

ணனும் இவனை 'ஸூத்ராதிரேவ' என்று ஆத்மரதி நிரதன் ஆத்ம த்ருப்தன் என்று 'ஹவ' காரத்தோடு குறிப்பிட்டார். இவன் ஶ்ருங்கார வேத மந்த்ரத்தையே ஜபித்துக் கொண்டிருக்கிறான். 'ஶாகிவ்ராஜாஸ' 'நிஷ்காமமானது' என்று பெயர் மட்டுமே. உண்மையில் ரதிப் பயிற்சியிலேயே நோக்கு.

இப்படி வீண் பரிஹாஸம் செய்வது வஸந்தனுக்குப் பிடிக்கவில்லை. இவன் ப்ரமாண வசநங்களை விபரீதமாய் க்ரஹித்துத் தப்புப் பரிஹாஸம் செய்கிறான் என்று மனதிற்குள்ளேயே சொல்லிக்கொண்டு, பிறகு 'தோழா! ப்ரபலமான சத்ருக்களின் அருகில் இப்படிப்பட்ட வீண் பெருமைப் பேச்சினாலென்ன பயன்?' என்கிறான். [தொடரும்]

ஶ்ரீ:

ஶ்ரீமதே லக்ஷ்மீ ந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

கீதாம்ருதவர்ஷிணீயின் முகவுரை.

[சிலுக்கூர் ஸ்ரீ. உப. மா. வேங்கடராகவாசார்யர், சிரோமணி,
ஸ்ரீ அஹோபில மடம் ஸ்ரீ கார்யம், ஹைதராபாத்; கத்வால் ஸம்ஸ்தான தர்மாதிகாரி]

यत्पादपद्मनिष्यन्दिमकरन्द(रसं)धुनींधयन् । कायातवः कृतार्थोभूत्तं लक्ष्मीनृहरिं भजे ।
यदपाङ्गलेशपतनं यच्छति कल्याणसन्ततिं पुंभ्यः ।
करुणालवालमीडे श्रीमच्छ्रीरङ्गकारिजार्यं तम् ॥

ஆர்ய வர்யர்களே! நாம் அநாதியான கர்மவித்யாதி சக்ரத்தில் அகப்பட்டு, அதனால் சுற்றப்பட்டு, ப்ரக்ருதியாகிற பிசாசத்திற்கு வசப்பட்டு, நமக்கு ஸ்வபாவ ஸித்தமான ஜ்ஞாநாநந்தாதி குணங்களை விட்டு, 'தாஸபூதா:' என்கிற கணக்கிலே பரமாத்மாவுக்கு ஊழியம் செய்யும் தன்மையை மறந்து, 'ஸ்வம் ந' என்றால் 'ஸோஹம் ந' என்று சொல்லும்படிக் குரிய அஹங்கார மமகாரங்களை அடைந்து, ஸாம்ஸாரிகமான பல துக்கங்களை அநுபவித்துக்கொண்டு, பிறப்பதும் இறப்பதுமாக இருந்து, ஸம்ஸார ஸமுத்ரத்தினின்றும் கரையேற முடியாமல் தவிக்கின்றோம் என்பது ப்ரத்யக்ஷ ஸித்தம். இந்த ஜீவாத்மாக்களுக்குப் பத்தர்களாக இருக்கும் தன்மையாவது :—இந்த ஸம்ஸார பந்தத்தை விட்டு ஒரு க்ஷணமேனும் இருக்கமுடியாம லிருக்கை. இப்ரக்ருதி ஸம்பந்தம் ஜீவன்களுக்கு விசித்ரமானது. ஏனென்றால், இவ்வளவு கஷ்டங்களை நாம் அநுபவித்து வரும்போதும், நமக்கு இவைகளில் ஜுகுப்ஸை தோன்றவில்லை; தோன்றாததும் தவிர, இவையெல்லாம் ஸுகரூபமாகவும் தோன்றுகின்றன. ஆகையால் தான் ஸ்ரீ சங்கராசார்யர், 'ஸந்து ஸாம்ஸாரிகாணாம் ஸுகமபி விஷய வாரம் வாரம்' என்று அறுதியிட்டார். இவைகளை விடுவதற்குரிய உபாயங்களை மயர்வற மதிநல மருளப்பெற்ற நம் பூர்வாசார்யர்கள் பின்வருமாறு விசாரித்து நிர்ணயித்திருக்கிறார்கள். பகவான் தன்னுடைய நாபீ கமலத்தில் உண்டான ப்ரம்ஹதேவனுக்கு, ஸத்புருஷர்களுக்கு ஸம்பத் ரூபமாகவுள்ள வேதஜாலங்களை உபதேசித்தான். அவ்வேதங்களுடைய பொருள்களை மந்தமதிகளான நாம் எளிதில் தெரிந்துகொள்வது ஶக்யமல்லவென்று பகவான் பராஶர வால்மீகி முதலான சில மஹர்ஷிகளை அவதரிப்பித்து, தான் அவர்களை அநுப்ரவேசித்து, அவர்கள் மூலமாக ஸ்ம்ருதி இதிஹாஸம் புராணம் ஆகமம் முதலானவைகளை வேதங்களுக்கு வ்யாக்யாந ரூபங்களாகச் செய்துவைத்தான். இதிஹாஸமாவது: ஸ்ரீமத்ராமாயணம் பாரதம் முதலானவை. இவைகளும் ஸ்ம்ருதிகளைப் போல் முக்யமான ப்ரமாணங்கள். வேத ப்ரதிபாத்யனான நாராயணன் தசரத சக்ரவர்த்திக்குத் திருமகனாக அவதரித்தவாறே, அப்ரதிபாதகமான அவ்வேதமும் வால்மீகியின் முக கமலத்திலிருந்து ராமாயண ரூபமாக அவதரித்தது. வேதத்திற்கு ராமாயணம் வ்யாக்யாந ரூபமென்பது ஸுஸ்பஷ்டம். மஹாபாரதம் ஸ்ரீக்ருஷ்ண பகவானுடைய ஸஹாயத்தால், பாண்டவர்கள் போரில் ஜயத்தை அடைந்த கதையைச் சொல்லுகிறது. இதைச் செய்தவர் விஷ்ணுவினுடைய அவதாரமாகிய வ்யாஸ மஹர்ஷி. 'க்ருஷ்ணத்வைபாயநம் வ்யாஸம் வித்தி நாராயணம் ப்ரபும்' என்று, வ்யாஸர் நாராயணாவதாரமென்று கூறப்பட்டிருக்கிறது. இல்லாவிடில் இவ்வுலகில் மற்ற எவனால் மஹா பாரதத்தைச் செய்ய முடியும்? இம்மஹா பாரதம் 'பாரத: பஞ்சமோ வேத:' என்று வேதத்திற்கு ஸமமாக ஐந்தாவது வேதமாகக் கூறப்பட்டிருக்கிறது. ஏனென்றால்: வேதத்தில் எவ்வளவு நீதிகள் சொல்லப்பட்டுள்ளனவோ அவ்வளவு நீதிகள் இம் மஹா பாரதத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றன. இதில், ஸ்ரீமந் நாராயணனே பரதத்வம் என்றும், ப்ரம்ஹ ருத்ராதி தேவர்களை இவனே

ஸ்ருஷ்டித்தா னென்றும், ஸமஸ்த பாஞ்சராத்ர சாஸ்த்ரங்களும் பகவன்முக கமலத்தினின் றும் வெளிக் கிளம்பின வென்றும், மஹிமை வாய்ந்த பாஞ்சராத்ர சாஸ்த்ரத்திற்கு ப்ராமாண்யமும் சொல்லப்பட்டிருக்கின்றன.

இவற்றுள் முக்யமானது பகவத் கீதை. இது, குரு பாண்டவர்களுடைய யுத்தத்தில் குரு பக்தியாலும், பந்து ஸ்நேகத்தாலும், குலக்ஷய பயத்தாலும் ஏற்படும் அதர்மத்திற்குப் பயந்து, சண்டையில் ஊக்கமில்லாத அர்ஜுநனை, ஜாதி தர்மமாகையால் அவஶ்யம் யுத்தம் செய்யவேண்டுமென்று யுத்தத்தில் ப்ரவர்த்திக்கும்படி செய்து, யுத்த ப்ரோத் ஸாஹம் செய்கிற வ்யாஜத்தைக் கொண்டு, ஸ்வதர்மாநுஷ்டாநம் ஸர்வருக்கும் ஆவஶ்யக மென்று பரக்க உபதேசித்து, கர்மயோக ஜ்ஞாநயோக பக்தியோகங்களை ஜனங்கள் அநுஷ்டித்து ஶ்ரேயஸ்ஸை அடையுமாறு அர்ஜுநனைக் குறித்துப் பகவானால் உபதேசிக் கப்பட்டது. இப்ரபந்தத்தில், ஶரீரம் நசித்தாலும் ஜீவன் நசிப்பதில்லை யென்றும், அது நித்ய மென்றும், ஜீவன் பலத்தை இச்சிக்காமல் ஸாத்விக த்யாக பூர்வகமாகக் கர்மங்களைச் செய்யவேண்டு மென்றும், வர்ணாஶ்ரம தர்மங்கள் இக்கர்ம பூமியில் இருக்கும் வரையில் அவஶ்யம் அநுஷ்டேயங்க ளென்றும், பக்தி ப்ரபத்திகள் மோக்ஷோ பாயங்க ளென்றும், இவை முதலான விஷயங்கள் ப்ரதிபாதிக்கப்பட் டிருக்கின்றன. இது பதினெட்டு அத்யாயங்கள் கொண்டது; மூன்று ஷட்கங்களாகப் பிரிக்கப்பட்டுள் ளது. முதல் ஷட்கத்தால், பரமாத்ம ஸாக்ஷாத்காரத்திற்குக் காரணமான ஜீவாத்ம ஸ்வரூ பத்திற்கு ஸஹகாரிகளான கர்மயோக ஜ்ஞாந யோகங்கள் சொல்லப்பட்டன. இரண்டா வது ஷட்கத்தால், பகவத் ஸ்வரூபத்தை அடைவதற்காக, கர்மயோக ஜ்ஞாந யோகங் களால் ஸாதிக்கப்படும் பக்தி யோகம் சொல்லப்பட்டது. முதல் ஷட்கத்தினுடைய சேஷ பூதமான மூன்ருவது ஷட்கத்தில், மூலப்ரக்ருதி மஹதாதிகள் புருஷன் இவைகளுடைய விவேசநமும் பக்தி முதலானவைகளும் சொல்லப்பட்டன. அர்ஜுநனுக்குப் பகவானால் உபதேசிக்கப்பட்ட விஷயங்கள், வ்யாஸ மஹர்ஷியால் ஶ்லோகரூபமாக அநுவதிக்கப்பட் டன வென்று பலர் உரைப்பர். ஶ்லோக ரூபமாகவே அர்ஜுநனுக்குப் பகவான் உபதே சித்தா ரென்றும் சிலர் சொல்லுகிறார்கள். இவைகளை ஸமயாந்தரத்தில் விசாரிப்போம். இந்தக் கீதைக்கு அநேக வ்யாக்யாநங்கள் அநேகம் பெயர்களால் எழுதப்பட்டிருந்தபோதி லும், த்வைத, அத்வைத, விஶிஷ்டாத்வைத பரங்களான மூன்று பாஷ்யங்களே க்ரமமாக ஸ்ரீமதாநந்ததீர்த்த ஸ்ரீ சங்கராசார்ய ஸ்ரீராமாநுஜாசார்யர்களால் பூர்வகாலத்தில் ஶ்ருதி ஸ்ம்ருதிகளை யொட்டி எழுதப்பட்டு, ஆஸேது ஹிமாசலம் ஆஸ்திக ஶிகாமணிகளாலே ஆதரிக்கப்பட்டு விளங்குகின்றன. இம்மூன்று பாஷ்யங்கள்தாம் உண்மையாக அந்தந்த மதாநுஸாரமாக அர்த்தங்களை வெளியிட வல்லமை யுள்ளவை. அடியேன் ஆசார்யோப திஷ்டங்களான கீதார்த்தங்களைச் சுருக்கமாக இந்த ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா மூலம் தெரி விப்பதுடன், ஸ்ரீ நிகமாந்த மஹாதேசிகனால் கீதாபாஷ்ய வ்யாக்யாந ரூபமாக அருளிச் செய்யப்பட்ட தாத்பர்ய சந்த்ரிகா ஸ்ரீ கோசத்தினுடைய அர்த்தங்களை ஆவஶ்யகமான சில இடங்களில் தெரிவித்து, ஸ்ரீ பாகவதர்களுடைய அநுக்ரஹ பரீவாஹத்திற்குப் பாத்ரமாக ஆக்கவேண்டு மென்னும் எண்ணத்துடன் இதை எழுத முயல்கின்றேன். இதில் புத்தி பூர்வக மாகவோ அபுத்தி பூர்வகமாகவோ ஏற்பட்ட பிழைகளைப் பாகவதர்கள் க்ஷமித்து, குண லேசத்தால் ஸந்துஷ்டர்களாய், ஹம்ஸக்ஷீர ந்யாயத்தை அவலம்பித்து அடியேனை க்ருதார்த் தனாக ஆக்கவேண்டுமென்று ப்ரார்த்திக்கிறேன். [தொடரும்]

பஞ்சாங்க ஸங்க்ரஹம்

தாரண ௵ தை ௴

1௳	ஞாயிற்றுக்கிழமை ...	மகர சுக்ல ப்ரதமா திதி: **உத்தராயண புண்ய காலம்: பொங்கல் பண்டிகை.**
7௳	சனிக்கிழமை ...	ரதஸப்தமி.
11௳	புதன்கிழமை ...	ஸர்வ ஏகாதசி; ஏகாதசி - த்வாதசி திதித்வயம்.
12௳	வியாழக்கிழமை ...	த்ரயோதசி திதி.
13௳	வெள்ளிக்கிழமை ...	சதுர்த்தசி திதி.
14௳	சனிக்கிழமை ...	பௌர்ணமி திதி.
15௳	ஞாயிற்றுக்கிழமை ...	ப்ரதமை திதி: தைப் பூசம்.
16௳	திங்கட்கிழமை ...	த்விதீயை திதி.
17௳	செவ்வாய்க்கிழமை ...	அதிதி: **ஸ்ரீ திருமழிசைப்பிரான் திருநக்ஷத்ரம்.**
18௳	புதன்கிழமை ...	த்ருதியை திதி.
20௳	வெள்ளிக்கிழமை ...	**ஸ்ரீ கூரேசன் திருநக்ஷத்ரம்.**
26௳	வியாழக்கிழமை ...	ஸர்வ ஏகாதசி.
29௳	ஞாயிற்றுக்கிழமை ...	மகர க்ருஷ்ண சதுர்த்தசி திதி.

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ அத்திப்பட்டு அழகியசிங்கர் ப்ரபாவம்

[ஸ்ரீமதி ராஜலக்ஷ்மி, பஸவங்குடி, பெங்களூர்]

(ஸம்புடம் 3 ; ஸஞ்சிகை 12 ; பக்கம் 275-ன் தொடர்ச்சி)

இவ்வழகிய சிங்கர் அரசாட்சியில், பாதுகா ராஜ்யம் செழிப்புற்று விளங்கியது போல் கோசம் நிறைந்து தேசம் ஸுபிக்ஷமாய்ப் பொங்கிப் பொழிந்தது. லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன் விபூதி பதின்மடங்கு அபிவ்ருத்தியை அடைந்தது. ஸ்ரீ ஸ்வாமி தமது ஸ்ரீபாத தீர்த்தத்தின் வரும்படியைக் கொண்டே திருவெவ்வுளூர் ஸ்ரீ வீரராகவனுக்குப் பல்லக்கு முதலிய கைங்கர்யங்கள் செய்துவைத்தார்.

இவ்வழகிய சிங்கர் திருவடித்தாமரை நிழலில் அநேகர் அடைக்கலம் அடைந்தார்கள். அவ்வதிர்ஷ்டத்திற்குப் பாத்ரமானவர்களுள் என்னுடைய பிதாமஹரும் ஒருவர். அவர் ப்ரஸித்தி பெற்ற வக்கீல்; பரம பாகவதோத்தமர்; அமுதன் கோவில் தர்மகர்த்தா. அவருடைய பேரும் புகழும் எங்கும் பரவிநின்றன. அப்பக்கங்களில் அவருடைய அதிகாரம் எங்கும் தடையின்றிச் செல்லும்.

ஸத்குண ஸம்பந்நராகிய எனது பாட்டனார் நடுவயதிலேயே நோய் வாய்ப்பட்டார். அத்தருணங்களில் அவர் ஏதோ ஒன்றுக்கொன்று ஸம்பந்த மற்ற வார்த்தைகளைப் பேசினார். அதைச் செவியுற்ற சில ஆப்த பந்துக்கள் அன்பின் மிகுதியால், 'விரோதிகள், சூந்யம் பில்லி முதலியவைகள் வைத்துப் பூத பிசாசங்களை ஏவி யிருப்பார்கள்; மந்த்ரங்களால் பரிஹாரம் செய்யவேண்டும்' என்று ஆலோசித்தார்கள். அதை அறிந்த என் பிதாமஹர் பரிஹாஸமாய் நகைத்து, "வெகு அழகு உங்களுடைய யோசனை! இவ்வல்ப புத்தி உங்களுக்கு ஏன் தோன்றியது? ஒரு சூந்யமும் என் அருகில் நாடாது. அத்திப்பட்டு அழகிய சிங்கர் திருவடித்தாமரை நிழலில் ஒதுங்கிய என்னிடம் எந்தச் சில்லரைத் தெய்வம் வாலாட்டும்? நான் நிர்ப்பயமாய்ச் செல்லுகிறேன்" என்று சொல்லிவிட்டு, "தசரத சக்ரவர்த்தி கானகத்தில் ராமன், லக்ஷ்மணன், ஸீதை இவர்களை விட்டுப் பின்திரும்பி வந்த ஸுமந்த்ரரைப் பார்த்து, 'ஸீதை வநத்தில் எவ்விதம் ஸஞ்சரிக்கிறாள்?' என்று வினவியதற்கு, ஸுமந்த்ரர்,

'' गजं वा वीक्ष्य सिंहं वा व्याघ्रं वा वनमाश्रिता ।
नाहारयति संत्रासं बाहू रामस्य संश्रिता ॥'

[வநத்தில் ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன் திருக்கை நிழலில் ஸஞ்சரிக்கும் ஸீதாதேவி, யானையையோ ஸிம்ஹத்தையோ புலியையோ கண்டு அல்ப பயமும் அடையவில்லை.] என்று விடை யளித்தார். அதேபோல் ஸதாசார்யன் திருவடித் தாமரையை ஆஶ்ரயித்த அடியேனுக்குப் பயமென்பதுண்டோ?" என்றுரைத்தார்.

இப்படி இவ்வழகிய சிங்கரின் திருவடி நிழலில் அடைக்கலம் அடைந்த தங்யர்களின் பரமைகாந்தித்வம் ஸுப்ரஸித்தம்.

ஸ்ரீ:

2/10/33

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

ஸ்ரீ தேசிக வைபவம்

[சிறுங்கட்டூர், ஸ்ரீ. உப. S. N. ஸ்ரீராமதேசிக சிரோமணி
S. V. O. இன்ஸ்டிட்யூட், திருப்பதி.]

[ஸம்புடம் 3, ஸஞ்சிகை 8, பக்கம் 241-ன் தொடர்ச்சி.]

2. वेङ्कटनाथार्यः ॥

திருவேங்கடமுடையானுடைய ப்ரஸாதத்தால் அவனுடைய தீர்த்தவாரி திநமான புரட்டாசித் திருவோணங் கூடிய சுப திநத்தில் அவதரித்த நம் தேசிகமணிக்கு 'வேங்கடநாதன்' என்னும் அதே திருநாமம் சாத்தப்பட்டு விளங்கிவருகிறது. இங்கு, முன்பு கூறின நம் ஆசார்யனுடைய அவதார வ்ருத்தாந்தத்தையும், 'प्रादुरभवज्जगति दैत्यरिपुघण्टा' என்கிற ஸ்வாமியின் திருக்குமாரரான நயிநாராசார்யருடைய அருளிச் செயலையும், 'उत्प्रेक्ष्यते बुधजनैरुपपत्तिभूम्ना, घण्टाहरेस्समजनिष्ट यदात्मनेति' என்ற ஸங்கல்ப ஸூர்யோதயத்திலுள்ள ஸ்வாமியின் ஸ்ரீ ஸூக்தியையும் கணிசித்து, நம் ஆசார்யன் திருமணி

யாழ்வானின் அவதாரமென்று சிலர் கருதுகின்றனர். மற்றும் பலர், ‘**श्रीमद्वेङ्कटनाथार्य**’ என்றும், இவ்வாறு பலவித காரணங்களைக் கொண்டும் திருவேங்கட முடையானுடைய அவதாரமென்றே அபிப்ராயப்படுகின்றனர். நம் ஆசார்ய ரத்நத்தின் ஸ்ரீ ஸூக்திகளை நன்கு ஆராய்வோமாகில், அவர் திருவேங்கடமுடையானின் அவதார விசேஷமென்றே புலப்படும். அது எப்படியெனில் :—‘உத்ப்ரேக்ஷ்யதே’ இத்யாதி வாக்யத்திற்கு, “பற்பல காரணங்களைக் கொண்டு ஸர்வேஶ்வரனுடைய கண்டையே நிகமாந்த குருவாக அவனியில் தோன்றிற்று என அவிஜ்ஞர்கள் ஊஹிக்கிறார்களே யொழிய அது உண்மையான பொருளல்ல. திருவேங்கட முடையானுடைய அவதார மென்பதே உண்மை” என்றல்லவோ ஸ்வாமி ஸ்ரீ ஸூக்திக்குப் பொருள் கூறவேண்டும்? இக்கருத்தையே நயினாராசார்யரும், “நம் ஸ்வாமி திருவேங்கடமுடையானின் அவதார விசேஷமே. பலவித காரணங்களால் கண்டாவதார மென்றும், உடையவருடைய அவதார மென்றும் ஊஹிக்கிறார்கள்” என்ற கருத்துக் கொண்ட ‘**वेङ्कटेशावतारोयं तद्घण्टांशोऽथवा भवेत् । यतीन्द्रांशोऽथवेतयेवम्**’ என்கிற ஶ்லோகத்தால் ஸாதித்தருளுகிறார்.

வெகு நாளைக்கு முன் திருமலையில் தொண்டைமான் சக்ரவர்த்தி என்னுமோர் பாகவத ஶ்ரேஷ்டர் வஸித்துவந்தார். அம்மஹான் அடிக்கடி ஸ்ரீநிவாஸனை ஸாக்ஷாத்கரித்து அவருடன் ஸம்பாஷித்து வந்தார். இப்படியிருக்க, ஒருநாள் அம்மஹான் அலர்மேல் மங்கையுறை மார்பனைப் பார்த்து, ‘நீர் இதுவரை பற்பல அவதாரங்கள் எடுத்து உலகத்தைக் காப்பாற்றினீர். இக்கலியில் என்ன அவதாரம் எடுக்கப்போகிறீர்?’ என்று கேட்க, ஸர்வேஶ்வரனும், “பரமதங்களை யகற்றி விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தை நிலை நிறுத்த விஶ்வாமித்ர வம்ஶத்தில் வேதாந்தாசார்யனாக அவதரிக்கப்போகிறோம்; அவன் என்னுடைய அவதார விசேஷ மென்பதற்கு அறிகுறியாக ‘வேங்கட நாதன்’ என்னும் பெயருடன் விளங்கப்போகிறான்” என்று உத்தர மளித்தார் என்று பெரியோர்கள் சொல்லக் கேட்டிருக்கிறோம். இவ்ருத்தாந்த மடியாகவும் நம் ஸ்வாமி திருவேங்கடமுடையானுடைய அவதார மென்பதை நன்கு அறியலாம்.

தவிர: ஶ்ரிய:பதியான ஸர்வேஶ்வரன் லோக ரக்ஷணார்த்தமாகத் தசரத சக்ரவர்த்திக்குத் திருமகனாக அவதரிக்கத் திருவுள்ளம்பற்றி, அவ்வரசனால் செய்யப்பட்ட புத்ர காமேஷ்டி யாகத்தில் அக்நி பகவானால் அருளப்பட்ட பாயஸம் என்னும் வ்யாஜத்தால் தேவிமார்களுடைய கர்ப்பத்துள் புகுந்து சக்ரவர்த்தித் திருமகனாக அவதரித்த போதிலும், ஸ்ரீராமபிரானைப் பாயஸத்தின் அவதாரமென்று சொல்லாமல் எப்படி ஸர்வேஶ்வரன் அவதார விசேஷமென்றே கூறுகிறார்களோ, அப்படி அவனே கலியில் ஸம்ப்ரதாயத்தைக் காக்க அநந்த ஸூரியின் புதல்வனாகத் தோன்ற எண்ணங்கொண்டு திருமணியாழ்வான் என்ற வ்யாஜத்தால் கர்ப்பவாஸம் செய்து நிகமாந்த குருவாக அவதரித்தபோதிலும், திருவேங்கட முடையானுடைய அவதார விசேஷ மென்று சொல்வது பொருந்துமே யொழிய, அவ்வவதாரத்துக் கருவியாக உள்ள திருமணி ஆசார்யனாக அவதரித்தது என்று கூறுவது உசிதமாக மாட்டாது. நம் ஆசார்யன் கண்டாம்சம் என்ற ஸாமாந்ய ஜந உக்தியை, ‘ஸர்வேஶ்வரன், தான் நிகமாந்த குருவாக அவதரிக்கும் வ்ருத்தாந்தத்தைத் தெரிவிக்கவே திருமணியை முந்தி ஏவினான்’ என்று கூறியே ஸமர்த்திக்கவேண்டும். பெருமாள் எழுந்தருளும்பொழுது, அவன் வரவைத் தெரிவிக்கப் பரிசாரகர்கள் முந்திக் கண்டையை ஸேவித்துக்கொண்டு போகும் ஸம்ப்ரதாயத்தை இப்பொழுதும் சில திவ்யதேசங்களில் காண்கிறோமல்லவா? அலர்மேல் மங்கையுறை மார்பனான வேங்கடநாதனைக் காட்டிலும் ஆசார்ய வடிவம் பூண்ட வேங்கடநாதனுக் குள்ள வாசியைக் காட்டவே, இங்கு ‘ஆர்ய:’ என்ற பதம் வழங்கப்பட்டது.

3. कवितार्किककेसरी ॥

ஸ்ரீ ரங்கநாதன் அதிப்ரீதனாய் ஆசார்ய ரத்நத்திற்கு இப்பிருதத்தைத் தந்தருளினார். ‘கவிகளுக்கும் தார்க்கிகர்களுக்கும் ஸிம்ஹம் போன்றவர்’ என்பது இதன் பொருள். தேசிகன் இப்பிருதம் பெற்ற வரலாறு:—பூலோக வைகுண்டம் என வழங்கப்பட்டுவரும் ஸ்ரீரங்க க்ஷேத்ரத்தில் நிகமாந்தகுரு ‘வேதாந்தாசார்யன், ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரன்’ முதலிய பிருதங்களைப் பெற்றுப் பல சிஷ்யர்களுக்கு ஸ்ரீ பாஷ்யம் முதலிய ப்ரபந்தங்களை உபதேசித்துக்கொண்டு எல்லோராலும் கொண்டாடப்படும்படியாய் எழுந்தருளியிருக்க, அங்கு, ஆசார்யகம் பண்ணிக்கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸகல சாஸ்த்ர வேத்தாவாய் ஸாஹித்யத்தில் அதி சதுரமான அழகிய மணவாளப் பெருமாள் என்கிற ஸ்வாமியினுடைய சிஷ்யர்கள், தேசிகனுடைய ப்ராபவத்தையும் பிருதங்களையும் கண்டு ஸஹியாதவர்களாய், ஒரு நாள் அந்நகரிலுள்ள ப்ரமுகர்களை முன்னிட்டுப் பெரிய பெருமாள் ஸந்நிதியில் ஸபையைக் கூட்டி, அழகிய மணவாளப் பெருமாள் தேசிகன் இருவரையும் வரவழைத்து, ‘இருவர்களில் ஒரு ராத்ரிக்குள்ளாக ரங்கநாதன் விஷயமாக ஆயிரம் ஶ்லோகங்களை யார் இயற்றுகிறாரோ அவருக்குக் கவிதார்க்கிக கேஸரீ என்கிற பிருதம் அளிக்கப்படும்’ என்று நிர்த்தாரணம் செய்ய, அழகிய மணவாளப் பெருமாள் அழகிய மணவாளன் திருவடி விஷய

மாகப் 'பத கமல ஸஹஸ்ரம்' என்பதைச் செய்வதாயும், நம் ஆசார்யன் அத்திருவடிக்கும் நிலையான பாதுகை விஷயமாகப் 'பாதுகா ஸஹஸ்ரம்' என்பதைச் செய்வதாகவும் உறுதி கூறிப் போய் விட்டார்கள். நம் தூப்புல் அம்மான் வழக்கம்போல் ராத்ரி முதல் யாமத்தில் அழகிய மணவாளனை மங்களாசாஸநம் செய்துவிட்டுத் தம் திருமாளிகைக்கு எழுந்தருளி நித்ரைசெய்யத் தொடங்க, அருகிலுள்ள சிஷ்யர்கள் 'செய்த ப்ரதிஜ்ஞையை நிறைவேற்ற வேண்டாவோ?' என்று சொல்ல, ஸ்வாமியும் ப்ரபுத்தராய் ஒரு யாமத்திற்குள்ளாக ஆயிரம் ஶ்லோகங்களையும் தலைக்கட்டி, மறுநாள் ப்ரதிஜ்ஞை செய்தவாறே திருவோலக்கத்திற்குச் சென்று இப்ரபந்தத்தைச் செவிசாய்த்தருளினர். அழகிய மணவாளப் பெருமாள் ராத்ரியெல்லாம் ஶ்ரமப்பட்டும் ஐந்நூறு ஶ்லோகங்களுக்கு மேல் செய்யமுடியாதவராய்த் தலை குனிந்து நிற்க, இதைக் கண்ட ரங்கநாதன் மிகவும் உகந்து இப்பிருதத்தைத் தேசிகனுக்குச் சூட்டினர் என்பது ஸம்ப்ரதாய வித்துக்கள் கூறும் வ்ருத்தாந்தம். வைஷ்ணவ உருவம் இவ்வாறு ப்ரதிஜ்ஞை செய்து அதனடியாக க்ரந்தம்செய்த விதத்தைப் பாதுகா ஸஹஸ்ரத்திலேயே நாதபத்ததியில் 'प्रख्यातानां परिषदि सतां कारयित्वा प्रतिज्ञां,' 'अवधीरयसीव मञ्जुनादैरचमत्कारवचांसि दुर्जनानाम्' என்னு மிடங்களில் ஸ்வாமி ஸாதித்தருள்கிறார். இவ்வர்த்தமே 'एकयामिनी यामनिर्मितपादुकासहस्रश्रवणसञ्जातविस्मयरङ्गेशयविश्राणितकवितार्किकसिंहसमाख्या विख्यातवैदग्ध्या, என்று ஆசார்ய கத்யத்திலும் அநுஸந்திக்கப் படுகிறது. பாதுகா ஸஹஸ்ர மென்பது ஓர் அழகான காவ்யமாகும். இதைக் கண்டு களித்த பகவானால் 'கவிகேஸரீ' என்று பிருதமளிக்க, 'கவிதார்க்கிக கேஸரீ' என்று பிருதமளிப்பது பொருந்துமோ என்ற சங்கைக்கு, 'டிண்டிம கௌட மிஶ்ராதி விஜயங்களாலே தர்க்கம் செய்பவர்களில் கேஸரீ என்று மாத்ரம் எண்ணினேன். இப்பாதுகா ஸஹஸ்ரத்தைக் கண்ட பிறகு கவிகளுக்கும் நீயே கேஸரீ என்றுணர்ந்து இப்பிருத மளிக்கப்பட்டது' என்றும், 'வெகுகாலம் வாதஞ்செய்து அறியவேண்டிய விசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸாரத்தை இக் காவ்யமூலம் எளிதில் நிரூபித்தபடியால் இப்பிருதமே உசிதமென்று அளிக்கப்பட்டது' என்றும் இருவகையாக ஸமாதாநம் கொள்ளலாம். [தொடரும்]

ஸ்ரீ:

ஸ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹ பரப்ரஹ்மணே நம:

செய்திகள்

(1)

ஸ்ரீ தில்லஸ்தாநம் ஸ்வாமியின் 73-வது திருநக்ஷத்ர மஹோத்ஸவம். திருவஹீந்த்ரபுரத்தில் நடந்த வைபவம்.

"ஆசார்யம் ப்ரகாஶயேத் தீமாந்" என்று ஒவ்வொருவனும் தன் ஆசார்யனைப் போற்றி யுகப்பதும் புந்தியிற் கொள்வதும் பொங்கு புகழ்ச் சாற்றி வளர்ப்பதும் வேண்டும். 'ஆசார்ய தேவோ பவ', 'யஸ்ய தேவே பரா பக்தி: யதா தேவே ததா குரௌ', "தேவமிவாசார்யமுபாஸீத" "ஆசார்யாதிஹ தேவதாம் ஸமயிகாம் ந்யாம் ந மந்யாமஹே" என்னும் ஶ்ருதி வாக்யங்களாலும் மற்றும் ஸ்ரீ தேசிகன் வாக்காலும் ஆசார்யர்கள் தேவதுல்யர் என்பதை நன்கறியலாம். ஒருவன் ஸர்வேஶ்வரனுடைய க்ருபைக்குப் பாத்ரமாக வேண்டுமானல், அவன் முந்தி ஆசார்யர்களுடைய க்ருபையை அடைய வேண்டும். ஆசார்யர்கள், தண்டதரனை ஸர்வேஶ்வரனைவிட பரம க்ருபாளுக்கள். அவர்கள் க்ருபையை அடைவதற்கு 'குரோர் நாம ஸதா ஜபேத்' என்று ஸதா குருவின் நாமத்தை ஜபிப்பதும், உற்ற காலத்தில் அவன் திருநாட்களைப் பரக்கக் கொண்டாடுவதும் ஏற்ற ஶிஷ்ய க்ருத்யங்கள்.

தாரணஸு கார்த்திகைமீ 16உ (1-12-44) வெள்ளிக்கிழமை, ஸ்ரீமத் வேதமார்க்க ப்ரதிஷ்டாபநாசார்ய பரமஹம்ஸ பரிவ்ராஜகாசார்ய ஸர்வதந்த்ர ஸ்வதந்த்ரோபய வேதாந்தாசார்ய ஸ்ரீ பகவத் ராமாநுஜ ஸித்தாந்த நிர்த்தாரண ஸார்வபௌம தில்லஸ்தாநம் ஸ்ரீ ஶடகோப ராமாநுஜ யதீந்த்ர மஹா தேசிகனுடைய 73-வது திருநக்ஷத்ர மஹோத்ஸவம் திருவஹீந்த்ரபுரத்தில் ஸ்ரீ தேவநாதன் திருவடிவாரத்தில், கருடநதிக் கரையில் உள்ள ஆஶ்ரமத்தில் வெகு ஸம்ப்ரமமாக நடைபெற்றது. அம்மஹோத்ஸவத்துக்கு மஞ்சகுப்பம் திருப்பாப்புலியூர் முதலிய சுற்றுப்புற ஸ்தலங்களிலிருந்து பல ஸ்வாமிகள் எழுந்தருளியிருந்தனர். ஸ்ரீ ஸ்வாமியின் அருளையும் ஆசியையும் பெறுவதற்கென்று ஸ்ரீஸந்

Regd. No. M. 4437

நிதி தர்மகர்த்தரும் கூடலூரினின்றும் விஜயம் செய்திருந்தார். காலையில் ஸ்வாமிகள் பலர் ஆஶ்ரமத்துக்கு எழுந்தருளினதும், ஆசார்ய ஸம்பாவனை நடைபெற்றது. அதன் மேல் ஸ்ரீ ஸ்வாமி, தமது அடியார் குழாங்களுடன் ஸந்நிதிக்கு எழுந்தருளி, ஸ்ரீ ஹேமாப்ஜ நாயகி, ஸ்ரீ தேவநாதன், ஸ்ரீ சக்ரவர்த்தித் திருமகன், ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகன் முதலிய எம்பெருமான்களை ஹ்ருதயங்கமமாக மங்களாஶாஸநம் பண்ணும்படி யிருந்தது. பிறகு இத் திவ்ய தேசத்தில், ஸ்ரீ ஸ்வாமி திருவடியா யிருப்பார் சிலரும், ஸ்ரீ ஸ்வாமி திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தை அநுபவிக்கும்பொருட்டே இங்கு எழுந்தருளி யிருந்த சிலரும், மற்றும் இவ்வக்ரஹார ஸ்வாமிகளும், த்ரவ்யத்தையும் சரீரத்தையும் அர்ப்பணம் பண்ணி, ஸ்ரீ தேவநாதன் ஸந்நிதியில் மிகுந்த பக்தி ஶ்ரத்தையோடு ஷட்ரஸோபேதமான ததீயாராதநத்தைச் செய்தார்கள். ததநந்தரம், ஸ்ரீ ஸ்வாமி திருவடியும் தமிழ்ப் பண்டிதருமான ஸ்ரீ. உப. ஒரகடம் கோ. ஸுதர்சநாசார்யர், ஸ்ரீ ஸ்வாமியின் திவ்ய சரித்ரத்தை— ஸ்ரீ ஸ்வாமியின் திருவோலக்கத்தில்—கோஷ்டியில்—பரக்க உபந்யஸித்தார். இத்திவ்ய தேசத்தில் நடந்த ஸ்ரீ ஸ்வாமியின் திருநக்ஷத்ர மஹோத்ஸவத்தின் வைபவத்தை வர்ணிக்க, "[illegible]" என்றபடி ஸஹஸ்ர வதநனுகிய ஸர்வேஶ்வரனே வேண்டும். அதன் பின்னர், ஸ்ரீ உப. சேட்லூர் ஸ்ரீநிவாஸ மூர்த்தி ஐயங்கார் ஸ்வாமி, ஸ்ரீஸ்வாமியின் ஸௌஶீல்யாதி குணங்களையும், ஸ்ரீ ஸ்வாமிக்குள்ள உபய வேதாந்தங்களின் வைதுஷ்யத்தையும் பரக்கப் பேசி, ஆசார்ய ரத்நமாகிய ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் திருவுள்ள முவந்து எழுந்தருளியிருக்கும் இத் திவ்ய தேசத்திலேயே ஸ்திரமாய் எழுந்தருளியிருந்து அக்ரஹாரிகாளை அநுக்ரஹித்துக் கொண்டிருக்கவேண்டு மென்று ஸ்ரீ ஸ்வாமியைப் ப்ரார்த்தித்துக் கேட்டுக்கொண்டார். பிறகு சந்தந தாம்பூலாதிகள் வழங்கப்பட்டுக் கோஷ்டி கலைந்தது,

தொ. தொரைராகவாசார்யர்

---

(2)

ஸ்ரீமந் நிகமாந்த மஹா தேசிகன் ஸபை—டேங்கிணிக்கோட்டை.

சேலம் ஜில்லா ஓசூர் தாலூகா டேங்கிணிக்கோட்டையில் விளங்கும் ஸ்ரீ பேடராய ஸ்வாமி தேவாலயத்தில் எழுந்தருளியுள்ள ஸ்ரீமந்நிகமாந்த மஹா தேசிகனுக்கு, 19–9–44 முதல் 28–9–44 வரை வார்ஷிகோத்ஸவம் வெகு விபவமாகக் கொண்டாடப்பட்டது. சாத்துமறையன்று காலை பெருமாள் ஸந்நிதியில் மூலவருக்கும் உத்ஸவருக்கும் அலங்கார திருமஞ்சநம் ஆன பின்னர், ஸ்ரீ தேசிகன், பெருமாள் தாயார் ஸ்ரீ பாஷ்யகாரர் ஸந்நிதிக்கு எழுந்தருளி விஶேஷ மர்யாதைகளுடன் மங்களாஶாஸநம் செய்தருளினர். தேசிகன், மீண்டும் தம் ஸந்நிதிக்கு எழுந்தருளினதும் ஸேவாகாலம் நடந்து சாத்துமறையாகி, திருமாலை திருப்பரியட்டம் அருளிப்பாடு முதலான மர்யாதைகள் நடந்தன. பிறகு டெங்கணிக் கோட்டையில் திருவவதாரம் செய்து துரீயாஶ்ரமம் பெற்று எழுந்தருளியிருந்த ஸ்ரீமத் பரமஹம்ஸேத்யாதி வரதராமாநுஜ யதீந்த்ர மஹா தேசிகனுக்குத் திருமாலை திருப்பரியட்டம் முதலிய மர்யாதைகள் நடந்தேறின. அநந்தரம் கோஷ்டிக்குத் தீர்த்த ப்ரஸாதமான பின்னர் அலங்கால ததீயாராதநம் நடந்தது. மாலை பெருமாளுடன் புறப்பாடாய், தேசிகன் ஸந்நிதிக்கு எழுந்தருளி, அதிகாரஸங்க்ரஹம் திருவாய்மொழி ஸேவை சாத்துமறையானதும் விஶேஷ தளிகை அமுது செய்தானபிறகு, ராத்ரி உத்ஸவமும் விஶேஷமாகக் கண்டருளினர். பக்தகோடிகள் பலர் விஜயம் செய்து ஆநந்தித்தனர்.

காகிதப் பஞ்சத்தால் இவ்வர்ஷத்திய உத்ஸவக் கணக்கு தனியாக அச்சிடக் கூடவில்லை. மஹா ஜநங்களுக்கு இக்கணக்கை ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியா மூலம் தெரிவிக்கிறோம்.

30—9—43 முதல் 27—9—44 வரையில் ஸபை மெம்பர்களாலும் பக்த ஜநங்களாலும் வரவு	ரூ. 167	8	0
13—9—44 வரை திருநக்ஷத்ரச் செலவு	ரூ. 154	8	0
டெங்கிணிக்கோட்டை டவுன் பாங்கியில் இருப்பு ...	ரூ. 13	0	0

குறிப்பு:—இவ்வர்ஷம் ஸ்ரீ தேசிகன் திருநக்ஷத்ர தினத்தில் ப்ரதிவாதி பயங்கரம் ஸ்ரீ. உப. வேங்கடாசார்ய ஸ்வாமி, 'ராமாநுஜ தயாபாத்ரம்', 'ஸ்ரீ தேசிகனுடைய ஸர்வதந்த்ர ஸ்வாதந்த்ர்யம்', 'கண்டாவதாரம்' என்பவைகளைப்பற்றிக் கேட்போர் இன்பமடையும்படி அழகாக உபந்யஸித்தார். 5-11-44 முதல் ஸ்ரீ. உப. ஆயி நரஸிம்ஹாசார்ய ஸ்வாமி காலக்ஷேப முகத்தால் பூர்வ தினசரி, தேசிகப்ரபந்தம் முதலியவைகளை ஸாதித்து வருகிறார். 'வர்த்ததாம் அபிவர்த்ததாம்' என்று இந்த ஸபை மேன்மேல் ஓங்கிப் பெருகுமாறு ஸ்ரீ அழகிய சிங்கர் அருள்புரிவாராக.

K. வேங்கடாசார்யர், ஸெக்ரிடெரி.

Printed by K. Satakopachariar, at the Liberty Press, 10, Linghi Chetty Street. G.T., Madras.
Edited & Published by S. Vasudevachariar, 5, Ramaswami Street, Tyagarayanagar, Madras.

श्रीः

श्रीमते लक्ष्मीनृसिंहपरब्रह्मणे नमः

योऽन्तः प्रविश्य मम वाचमिमां प्रसुप्तां सञ्जीवयत्यखिलशक्तिधरः स्वधाम्ना ।
अन्यांश्च हस्तचरणश्रवणत्वगादीन् प्राणान्नमो भगवते पुरुषाय तस्मै ॥

ஸம்பாதகரின் குறிப்புக்கள்

ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹனுடைய பெங்களூர் வாஸம்.

சற்றேறக்குறைய இரண்டு மாஸ காலமாக ஸ்ரீ லக்ஷ்மீ ந்ருஸிம்ஹன், மைஸூர் பெங்களூர் முதலிய மேற்கு ப்ரதேஶங்களில் வஸிக்கும் பக்தர்களால் ஆராதிக்கப்பெற்று அவ்விடத்தில் ப்ரீத்யதிசயத்துடன் எழுந்தருளியிருக்கிறுன் என்று நாம் அறிகிறோம். கண்ணபிரானுக்கு மதுராபுரியில் அபிமாநம் இருக்கையிலும் தர்மாதிகர்களான தர்மபுத்ராதிகளும், தம்மிடத்தில் நிரதிஶயமான பக்தியைச் செய்துவரும் த்ரௌபதியும் இருக்குமிடமே அவருக்கு அதிமாத்ரம் இஷ்டமாக இருந்தது. அவன் எப்பொழுதாவது அவ்விடம் எழுந்தருளினல், அந்த இடம் காடாக இருந்தாலும் அதில் தம்மால் உத்தேஶித்த காலத்தைக் காட்டிலும் பதின்மடங்கு அதிகமாகவே எழுந்தருளியிருப்பது வழக்கம். “तत्तस्य किमपि द्रव्यं यो हि यस्य प्रियो जनः” என்பதன்றே அதற்குக் காரணம்? பெங்களூர் வாஸிகள் ந்ருஸிம்ஹனுக்கு அதிமாத்ரம் ப்ரியர்களானபடியால், ந்ருஸிம்ஹன் அவர்களை விட்டுப் பிரிவதற்கு அநபிமதமாக அவ்விடத்திலேயே எழுந்தருளியிருக்கிறுர்போலும். “क्षणेऽपि ते यद्विरहोऽतिदुस्सहः”. அங்கு எழுந்தருளியிருக்கும் பக்தோத்தமர்களும், கிடைக்கத்தகாத வஸ்து கிடைத்தாற்போல அத்யாநந்த பரிதர்களாய் அவனை ஆராதித்து வருகிறுர்களென்று நாம் கேள்விப்படுகிறோம். அவர்களுடைய பாக்யமே பாக்யம். ஆனல் அது குளிர் தேஶம். அந்தக் குளிருக்கு அபரிசிதர்களாக இருக்கும் தனது கைங்கர்யபரர்களின் ஶ்ரமத்தைக் கடாக்ஷித்தாவது அவன் ஶீக்ரத்தில் அவ்விடமிருந்து யாத்ரையாகப் புறப்படுவானென்று நாம் நம்புகிறோம். இதர இடங்களிலும் அநேக பக்தர்கள் அவனுடைய ஸேவை எப்பொழுது கிடைக்குமென்று சாதக பக்ஷிபோல் எதிர்பார்த் திருக்கிறுர்கள். அவர்களை அநுக்ரஹிப்பதும் அவனது தர்மமன்றே?

*   *   *   *

ஸ்ரீ தேஶிக ப்ரபந்த மஹோத்ஸவம்.

சென்ற டிஸம்பர் மாஸம் 28, 29, 30-ம் தேதிகளில் தஞ்சாவூர் வெண்ணாற்றங்கரையிலுள்ள ஸ்ரீ நீலமேகப் பெருமாள் ஸந்நிதியில் “ஸ்ரீ தேஶிக ப்ரபந்த மஹோத்ஸவம்” என்று விலக்ஷணமான உத்ஸவமொன்று நடைபெற்றதென்று கேட்டு நாம் மிகவும் ஆநந்திக்கிறோம். ஒப்பிலியப்பன் ஸந்நிதி நவநீதம் ஸ்ரீ. உப. ஸ்ரீராமதேஶிகாசார்ய ஸ்வாமியால் இயற்றப்பட்டுள்ள உரையுடன் அந்த ப்ரபந்தம் அந்த உத்ஸவ காலத்தில் அநேக வித்வான்களின் முன்னிலையில் அரங்கேற்றப் பெற்றதாம். அத்யாஶ்சர்யமான ஸ்ரீ வைஷ்ணவ ஸம்ருத்தி அப்பொழுது அவ்விடத்தில் சேர்ந்ததென்றும், ஸ்ரீ தேஶிகனுடைய தமிழ்க் கவிதையைப்பற்றி அந்யாத்ருஶங்களான பல உபந்யாஸங்கள் ப்ரஸங்கிக்கப்பட்டன வென்றும், மூன்று நாள்களிலும் அந்தத் திவ்ய தேஶம் ஸ்வாநுரூபமான திவ்ய ஶோபையுடன் விளங்கிற்றென்றும் அந்த உத்ஸவத்தை ஸாக்ஷாத்தாக அநுபவித்தவர்கள் சொல்லுகிறுர்கள். உதைய்பூர் திவான் ஸ்ரீ. ஸர். டி. விஜயராகவாசார்யர் அந்த ஸங்கத்துக்கு அக்ராஸநம் வஹித்தாராம். கொச்சி ஹைகோர்ட் ஜட்ஜ் ஸ்தாநத்தை வஹிக்கும் ஸ்ரீ. உப. கே. எஸ். க்ருஷ்ண ஸ்வாமி ஐயங்கார் முதலான அநேக ஆஸ்திக ப்ரபுக்கள் அந்த ஸதஸ்ஸை அலங்கரித்தார்களாம். இந்த உத்ஸவத்தின் மஹிமை விஸ்தாரமாக அடுத்துவரும் ஸஞ்சிகையில் ப்ரபஞ்சிக்கப்படும். இதற்குமுன், பெருமாள் கோயில் முதலிய திவ்ய தேஶங்களில் ஸ்ரீ ராமாநுஜ தயா பாத்ர மஹோத்ஸவமென்றும் தயாஶதக மஹோத்ஸவ மென்றும் பாதுகா ஸஹஸ்ர மஹோத்ஸவ மென்றும் அநேக சிறந்த உத்ஸவங்களை நடத்திவைத்த ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாஸ ஐயங்கார் ஸ்வாமியின் தேஶிக பக்தியே இந்த உத்ஸவத்திற்கும் மூல காரண மென்று நாம் அறிகின்றோம். அவர், “[illegible]”; இம்மாதிரி கைங்கர்யங்களால் அவர் கல்யாணமான கார்த்தயுக தர்மத்தை நிலைநாட்டுகிறுர் என்பது ஒரு ஆஶ்சர்யமாகுமோ?

*   *   *   *

சந்தாதாரர்கட்கு ஒரு விண்ணப்பம்

ஸ்ரீ ந்ருஸிம்ஹ ப்ரியாவின் 3-வது ஸம்புடம், சென்ற 1944-ம் வருஷ டிஸம்பர் மாதத்தோடு முற்றுப்பெற்றுவிட்ட தென்பதை நமது ஸஹ்ருதுக்கள் அறிவார்கள். பல தடவைகளில் நாம் ஞாபித்தும், இன்னும் சிலர் 1944-ம் வர்ஷத்துச் சந்தாவைச் செலுத்தாதிருக்கிறார்கள். சந்தா பாக்கி செலுத்தாத அச் சந்தாதாரர்கள், நாளைப் பிப்ரவரி மாதத்திற்குள் அதனைச் செலுத்தி உதவி புரிய வேண்டுகின்றோம். அவ்வாறு செலுத்தத் தவறிய சந்தாதாரர்கட்கு மார்ச் மாதத்து ஸஞ்சிகை வி. பி. யில் அனுப்பப் படும்படிநேரிடும். அந்த ஶ்ரமத்துக்கு இடம் வைத்துக் கொள்ளாமல் பாக்கிப் பணத்தை (ரூ. 3) க்ருபை செய்து அனுப்பிவிட வேண்டுகின்றோம்.

நமது ந்ருஸிம்ஹ ப்ரியா காகிதப் பஞ்சத்தின் காரணத்தால் அரசாங்கத்தாரின் கட்டளைக்கு இணங்கி க்ருஶமாகப் போய்விடவே, சந்தாதாரர்களின் ஶ்ரமத்தைக் கணிசித்து, 1945-ம் ஆண்டுக்கு இதன் சந்தா 3 ரூபாயிலிருந்து ரூ. 2 ஆகக் குறைக்கப் பட்டிருக்கிறது. இதுவரை 1945-ம் ஆண்டுக்கு 3-ரூ. செலுத்தியுள்ள சந்தாதாரர்க்கு, இத்தொகை 1945–46-ஆகிய இரண்டு வருஷங்கட்கும் முறையே இரண்டும் ஒன்றுமாகப் பாகித்து வைத்துக்கொள்ளப்படும். இனி, 1945-ம் ஆண்டுக்குச் சந்தா செலுத்தாத சந்தாதாரர்கள் யாவரும், தமது சந்தாத் தொகையை (ரூ. 2) இன்னும் நாலு மாஸ தவணைக்குள் (ஏப்ரல் முடிவிற்குள்) முன் பணமாக அனுப்பி உதவவேண்டுமென்று ஸவிநயம் ப்ரார்த்திக்கிறோம்.

1944 - டிஸேம்பர் மாஸத்தில் சந்தா வரவு.

1944 - ம் ஆண்டேச் சந்தா

4	ஸ்ரீ	K. N. ராமஸ்வாமி ஐயங்கார், மதுரை	...	3	0
68	,,	G. சௌரிராஜையங்கார், கோபாலஸமுத்ரம்	...	3	0
69	,,	M. S. க்ருஷ்ணமாசார்யர், மல்லேசுரம், பெங்களூர்	...	3	0
245	,,	G. ஜகந்நாதஸ்வாமி, மசூலிப்பட்டணம்	...	3	0
247	,,	N. S. நாராயணையங்கார், டாட்ஹண்டர் நகர், சைதாப்பேட்டை	...	3	0
294	,,	I. ஸ்ரீநிவாஸாசார்யர், சைதாப்பேட்டை	...	1	0
419	,,	K. பார்த்தஸாரதி ஐயங்கார், பண்ருட்டி	...	3	0
420	,,	K. V. ராஜகோபாலையங்கார், பண்ருட்டி	...	3	0
421	,,	D. ஸௌந்தரராஜன், பண்ருட்டி	...	3	0
422	,,	E. R. சக்ரபாணி ஐயங்கார், பண்ருட்டி	...	3	0
431	,,	A. நாராயணையங்கார், தில்லஸ்தானம்	...	3	0
478	,,	E. ஸ்ரீநிவாஸாசார்யர், மேல்மா	...	3	0

1945 - ம் ஆண்டேச் சந்தா

5	,,	V. R. நாராயணன். பெங்களூர்	...	3	0
195	,,	R. ராமஸ்வாமி ஐயங்கார், Kolar gold fields	...	3	0
198	,,	P. S. ராகவையங்கார், திருநெல்வேலி	...	3	0
230	,,	K. பார்த்தஸாரதி ஐயங்கார், பம்பாய்	...	3	0
442	,,	K. நரஸிம்ஹாசார்யர், கொவளவல்லி	...	3	0
451	,,	K. R. ஸ்ரீநிவாஸையங்கார், தென்னூர், திருச்சி	...	3	0
543	,,	K. சார்ங்கபாணி ஐயங்கார், புதுப்பேட்டை	...	3	0
621	,,	T. T. ஸ்ரீநிவாஸாசார்யர், பீளமேடு	...	3	0
622	,,	K. ஸ்ரீநிவாஸகோபால ஐயங்கார், ஹொஸூர்	...	3	0
631	,,	சேட்லூர் T. கோபாலாசார்யர், Post Gadi Bero	...	3	0
644	,,	உ. சக்ரவர்த்தி ராஜம்மாள், அவளூர்	...	1	8
645	,,	M. ஸ்ரீநிவாஸையங்கார், தண்டரை	...	3	0
	,,	அர்ச்சகம் ரங்காசார்யர், அரும்பாக்கம்	...	1	8